சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 22.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com

நாட்டை எம்மிடம் கொடுத்து பாருங்கள்

தென்னாசியாவின் முன்னணி நாடாக திருப்பி தருகிறோம்

(ராஜ்)

இந்த நாட்டில், சிங்கள பௌத்தர் அல்லாத எமக்கு ஜனாதிபதி, பிரதமர், முன்னரங்க அமைச்சர் ஆக முடியாது. இது உங்கள் எழுதப்படாத சட்டம்.இன, மத, மொழி, சிறுபான்மை பேதங்களை, பத்து வருடங்களுக்கு இடைநிறுத்தி, நாட்டை எம்மிடம் கொடுத்து பாருங்

02 ஆம் பக்கத்தில்...

திருமலையில் அதிகரிக்கும் கோரோனா இறப்புகள்

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா காரணமாக இறப்பும் தொற்றும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிராந்திய வைத்திய அதிகாரி புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளியன்று காலை 10 மணியளவில் வரையான

02 ஆம் பக்கத்தில்...

திருமலை போது வைத்தியசாலைக்கு பிசீஆர் இயந்திரம் வழங்குவதற்கு நகராட்சி மன்றம் நடவடிக்கை

(சுஹஸ்பர் ஏ ஹலீம் , பொன் ஆனந்தம்)

COVID 19 , காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புக்களும் அதிகரிப்பதன் விளைவாக மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். மேலும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் PCR இயந்திரம் இல்லாமையினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாதிரிகளை அனுப்பி பரிசோதனை முடிவுகளை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதம் காரணமாக உரிய நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை

02 ஆம் பக்கத்தில்...

ஊழியர்களுக்கு கோரோனா தோற்று மட்டு. ஆடைத் தொழிற்சாலைக்கு பூட்டு

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற் சாலையை தற்காலிகமாக ஒரு வாரத்திற்கு மூடுவதற்கான

02 ஆம் பக்கத்தில்...

கொரோனாவால் அல்ல பட்டினியால் சாக போகிறோம்!

முல்லைத்தீவு மக்களின் பரிதாபம்

(முல்லைத்தீவு நிருபர்)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிக்கப் போகின்றோமோ இல்லையோ, உணவுக்கு வழியின்றி, பட்டினி கிடந்து, வெகு விரைவில்

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பில் முன்றாவது அலையில் 1199 தோற்றாளர்கள் அடையாளம்

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவிட் மூன்றாவது அலைகாரணமாக 1199 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 08 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பில் நேற்று 112 தோற்றாளர்கள்

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 112 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்

02 ஆம் பக்கத்தில்...

பயணக்கட்டுப்பாடு 7 ஆம் திகதி வரை நீடிப்பு

(காந்தன்)

இலங்கை முழுவதும் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாட்டை ஜூன் 7 ஆம் திகதி வரை தொடர தீர்மானித்துள்ளதாக இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதனால் முன்னர் அறிவித்ததை போன்று மே 31 மற்றும் ஜூன் 4 ஆம் திகதிகளில் பயணக் கட்டுப்பாடு

02 ஆம் பக்கத்தில்...

கோறளைப்பற்று மத்தியில் 54 பேருக்கு பரிசோதனை: 3 பேருக்கு தோற்று

(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று வெள்ளிக்கிழமை ஐம்பத்தி நான்கு நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தமிழர்களை நசுக்கும் செயற்பாடு

த.கலையரசன் எம்.பி.தெரிவிப்பு

(துறையூர் தாஸன்)

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் அப்பாவித் தமிழர்களை நசுக்கும் செயற்பாடே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...

குடும்பப்பெண் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு: மண்டூர் பிரதேசத்தில் சம்பவம்

(எஸ்.சபேசன்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளியடி வீதி பாலமுனை மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான சங்கரப்பிள்ளை தேவமலர் (47) என்பவரே தனது வீட்டின்

02 ஆம் பக்கத்தில்...

மீண்டும் 5000

இலங்கை முழுவதும் மே 21 ஆம் திகதி முதல் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில்,

02 ஆம் பக்கத்தில்...

கோறளைப்பற்று மத்தியில் 54 பேருக்கு பரிசோதனை

அன்டிஜன் பரிசோதனையில் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான் தெரிவித்துள்ளார்.

கோளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிய உறவினர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு ஐம்பத்தி நான்கு (54) நபர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், அதனுடன் பத்து (10) நபர்களுக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகளும் இடம்பெற்றது.

குறித்த அன்டிஜன் பரிசோதனை நிகழ்வில்; மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் சுகாதார வைத்திய அதிகாரிகளால் பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பில் நேற்று 112 தொற்றாளர்கள்

பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தோறும் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மற்றும் பி.சீ.ஆர். பரிசோதனைகளின் பிரகாரம் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22 பேரும் களுவான்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17 பேரும் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 07 பேரும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 19 பேரும் , ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேரும் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேரும் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேரும்பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேரும் வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேரும் கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 பேரும் வெள்ளாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேரும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 01 பேருமாக மொத்தம் 112 பேருமாக கொவிட் 19 தொற்றாளர்கள் அடையாளங்காணப் பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார்.

மீண்டும் 5000

இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம் முதல் இந்தக் கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தினக் கூலி அடிப்படையில் தொழில் செய்பவர்கள், வேறு வகையில் வருமானங்களை இழந்த குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கடந்த வருடத்தில் இதே போன்று நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில் மக்களுக்கு நிவாரணக் கொடுப்பனவாக 5000 ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் மூன்றாவது அலையில் 1199 தொற்றாளர்கள் அடையாளம்

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளைத் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பதற்கான சிபார்சினை தேசிய கோவிட் செயலணிக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மாவட்ட அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்கள், பயணக் கட்டுப்பாடுகளை முழுமையாகக் கடைப்பிடிப்பதன் மூலமே இந்த தொற்றினை கட்டுப்படுத்தமுடியும் எனவும் இதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் எனவும் அரசாங்க அதிபர் இதன்போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பத்தாயிரம் மற்றும் ஐந்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயணக்கட்டுப்பாடு 7 ஆம் திகதி வரை நீடிப்பு

தளர்த்தப்படாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொவிட் தடுப்பு தேசிய செயலணி கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நடமாடும் வாகனங்களின் ஊடாக விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஊழியர்களுக்கு கொரோனா தொற்று மட்டு. ஆடைத் தொழிற்சாலைக்கு பூட்டு

முடிவினை ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் எடுத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என்.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாளங்குடாவில் இயங்கிவரும் குறித்த ஆடைத்தொழிற்சாலையில் 3000த்திற்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றிவரும் நிலையில் கடந்த சில தினங்களாக இத் தொழிற்சாலையில் கடமை புரியும் ஊழியர்களிலிருந்து கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

நேற்று 71 தொற்றாளர்கள் இத் தொழிற்சாலையில் அடையாளம் காணப்பட்டதையடுத்து தொடர்ச்சியாக ஒரு வாரத்திற்கு குறித்த ஆடைத் தொழிற்சாலையை மூடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

குறித்த காப்பகுதியின் பின்னர் தொழிற்சாலைக்கு வருவோருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டபின்னர் கடமைக்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என்றும் ஆடைத் தாழிற்சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

திருமலை பொது வைத்தியசாலைக்கு பிசீஆர் இயந்திரம் வழங்குவதற்கு நகராட்சி

வழங்குவதில் சுகாதார துறையினர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர், PCR இயந்திரம் ஒன்றினை பொது வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யுமாறு வேண்டுதல் கடிதம் ஒன்றினை திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கு அனுப்பியிருந்தார். எனவே, இப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வழங்கும் வகையில் திருகோணமலை நகரசபையினால் கஇகீ இயந்திரம் ஒன்றினை திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு வழங்குவதற்கு நகரசபை உறுப்பினர்கள், மற்றும் தலைவர் ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளார்கள் .

PCR இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு 5.5 மில்லியன் ரூபா தேவைப்படுகின்ற நிலையில், இதற்கான நிதியினை ஒவ்வொரு உறுப்பினரும் தலைவரும் தமது வட்டாரத்திற்கான அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்குவற்கு தீர்மானித்துள்ளார்கள்.

சபை நிதியினை பயன்படுத்துவதற்கு கௌரவ ஆளுநர் (கிழக்கு மாகாணம்) அவர்களின் அனுமதியினை பெறுக்கொள்வதற்காக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடக விண்ணப்பக்கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்துடன் நகராட்சி மன்றத்தின் நிதி தொடர்பான விபரங்களும் கௌரவ ஆளுநர் பார்வைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. கௌரவ ஆளுநரின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் PCR இயந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான தொடர் நடவடிக்கைளை அரசாங்கத்தின் நிதிச்சட்ட விதிகளுக்குக்கமையவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் வழி காட்டல்களுக்கமையவும் நகராட்சி மன்றம் மேற்கொள்ளும் என அறிவித்துள்ளது.

திருமலையில் அதிகரிக்கும் கொரோனா இறப்புகள்

காலப்பகுதியில் இறப்புகளின் எண்ணிக்கை 76 ஆக உயர்ந்தது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மாவட்டத்தில் 3134 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் அதிலும் நடப்பு மேமாதத்தில் மட்டும் 1693 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையின் இணிதிடிஞீ 19 நிலவரம் பற்றிய தகவல்களை திருகோணமலைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் வெளியிடப்பட்டிருக்கும் தரவுகளின் அடிப்படையில் கிண்ணியா,குறிஞ்சாக்கேணி ,குச்சவெளி ,தம்பலகாமம், மூதூர் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அடங்கலான மரண எண்ணிக்கை 76 ஆக அதிகரித்துள்ளது .

அதேவேளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரையான முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 76 தொற்றாளர்கள் இணங்காணப்பட்டிருக்கிறார்கள் . அதிகபடியாக திருகோணமலை மற்றும் கிண்ணியா மருத்துவ சுகாதார அதிகாரி பிரிவில் தலா 23 தொற்றாளர்கள் இணங்காணப்பட்டிருக்கிறார்கள் . குச்சவெளி பிரிவில் 11பேர் இனம்காணப்பட்டு ள்ளதாகவும் புள்ளி விபரம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தொற்றின் போக்கு அதிகரித்து ள்ளது.

கொரோனாவால் அல்ல பட்டினியால் சாக போகிறோம்!

சாக போகின்றோம் என முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆடைத் தொழில்சாலையில் பணிபுரிபவர்களுக்கு ஏற்பட்ட கொரோனா கொத்தணியில் பலருக்கு தொற்று இனங்காணப்பட்டது. இதன் காரணமாக புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுகள் கடந்த 17ஆம் திகதியன்று முடக்கப் பட்டன.

இருப்பினும் கடுமையான பாதிப்புக்கள் இருந்த 11 கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த 21ஆம் திகதியன்று விடுவிக்கப்பட்டன. எனினும், பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளாந்த கூலித்தொழிலை நம்பிவாழும் பல குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, கடந்த 17ஆம் திகதி முதல் திடீரென எந்த அறிவித்தலுமின்றி முடக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பில் 9 கிராம அலுவலர் பிரிவுகளிலும் முள்ளியவளையில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் அத்தியாவசியப் உணவுப்பொருட்கள் இன்றி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து முடக்கப்பட்ட நிலையிலிருக்கும் புதுக்குடியிருப்பு பத்தாம் வட்டார மக்கள், தாம் கொரோனாவால் இறக்கிறோமோ இல்லையோ உணவின்றி இறக்கப்போகிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இன்றுவரை எந்த உலருணவு பொருள்களும் கிடைக்கவில்லை. தமது பகுதியிலுள்ள சிலர், தமக்கு பிடித்தவர்களுக்கு மாத்திரம் வெளிநாடுகளில் இருந்து வரும் நிதிகள் மூலம் உதவுவுகின்றனர்.

அவ்வாறான உதவிகளை, பாதிக்கப்பட்டுள்ளவர்களை முன்னிலைப்படுத்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி முடக்கநிலையிலும் தமது கிராமத்தில் ஒன்றுகூடி, நேற்று (27) எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில், அங்கு வந்த பிரதேச செயலக அதிகாரிகள், அவ்வாறான சம்பவங்கள் இனி நடக்கவிடாது பார்ப்பதாகவும் உரிய வகையில் உதவித்திட்டங்களை பெற்றுத்தர ஆவண செய்வதாகவும் தெரிவித்தனர். அதனையடுத்தே, அங்கிருந்து மக்கள் கலைந்து சென்றனர்.

நாட்டை எம்மிடம் கொடுத்து பாருங்கள்

வருடம் தென்னாசியாவின் முன்னணி நாடாக திருப்பி தருகிறோம் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, சிங்கள பெரும்பான்மை அரசியல்வாதிகளை விளித்து கூறியுள்ளார்.

டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.அதில் மேலும், உங்கள் நண்பர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு கூட நீங்கள் பிரதமர் பதவியை தர மறுத்தீர்கள். ஜே.வி.பி மட்டுமே அவருக்கு பிரதமர் பதவி தர வேண்டுமென்று சொன்னது.இலங்கை, இயற்கை வளமில்லாத வளஏழை நாடு அல்ல. இங்கே என்ன இல்லை? இந்நாட்டை ஆளுவோரிடம் நேர்மை, தூரப்பார்வை, அர்ப்பணிப்பு, அரசியல் திடம், துணிச்சல் ஆகியவை இல்லை.குறிப்பாக, தாம் மட்டுமே இந்நாட்டின் ஏக உரிமையாளர் என எண்ணும் பெரும்பான்மை அரசியல்வாதிகளிடம் தலைமைத்துவ பண்புகள் இல்லை.

இதுதான் கசப்பான இல்லைகளின் உண்மை. கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எமது நாட்டின் சுதந்திரம் முதல் வளர்ச்சி வரை பெரும் பங்களிப்புகளை வழங்கினார்கள்.அது ஒரு பொற்காலம். இப்போது இந்நாடு, இலங்கை தீவு, உங்களுக்கு மட்டுமே ஏகபோக சொந்தமானது என தவறாக, இனவாத கண்ணோட்டத்தில் நீங்கள் நினைகின்றீர்கள்.இந்த எண்ணம் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டிலும் உள்ளது. எல்லா பெரும்பான்மை கட்சிகளிலும் உள்ளது. இதை நான் அனுபவப்பூர்வமாக கண்டு அனுபவித்துள்ளேன்.

இன்று இந்நாடு ஒரு தோல்வியடைந்து வரும் நாடு.இதன் காரணம் என்ன என்பதை யோசியுங்கள். சுதந்திரம் பெற்ற 1950களில், இந்நாட்டின் வெளிநாட்டு செலவாணி கையிருப்பு, ஜப்பானுக்கு அடுத்து அதிகம் இருந்தது. கடன் கொடுக்க கூடிய நாடாக நாம் இருந்தோம். இன்று நாம் எங்கே இருக்கிறோம்?இவை எல்லாவற்றுக்கும் காரணம், அறிவுகெட்ட இனவாத முட்டாள்களின் கையில் நாடு இருந்தமைதான். தெற்காசியாவை விடுங்கள். முன்னேறிய தென்கிழக்கு ஆசியாவை எடுங்கள்.சிசு மரணம், கல்வி வளர்ச்சி, ஆயுள், மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகியவற்றில் நாம் கூடக்குறைய சிங்கப்பூர், மலேசியா, பிலிபைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, கொரியா வியட்னாம் ஆகிய நாடுகளை விட முன்னேறி இருந்தோம்.

நான் மதிக்கும் சிங்கப்பூரின் ஸ்தாபகர் லீ குவான் யூவும், மலேசிய ஸ்தாபகர் மஹதிர் முகமதும், தமது நாடு இலங்கையை எட்டி பிடிக்க வேண்டும் என்பதே தமது இலக்கு என அன்று பகிரங்கமாக கூறினார்கள். இன்று அவர்கள் எங்கே? நாங்கள் எங்கே? இப்போது தென்னாசியாவை பாருங்கள். இந்தியா பெரிய நாடு. அதனுடன் எம்மை ஒப்பிட முடியாது.ஆனால், 1972ல் பிறந்த பங்களாதேஷ்கூட, இன்று மதசார்பற்ற நாடாக எங்களை முந்தி போகிறது. இது உங்களுக்கு தெரியுமா? இன முரண்பாடுகள், யுத்தம், அரச மற்றும் அரசு அற்ற பயங்கரவாதங்கள், பொருளாதார வீழ்ச்சி, வெளிநாட்டு செலவாணி பிரச்சினை, அகோர தேசிய கடன் தொகை, கடன் தருகிறேன் என்று சொல்லி உலக சக்திகள் உள்நாட்டுக்குள் வருகை, ஆகியவற்றின் பின்னுள்ள பிரதான காரணம், பௌத்தம் முதன்மை (புத்திசம் பர்ஸ்ட்), சிங்களம் மட்டும் (சின்ஹல ஒன்லி) என்ற முகத்துடன் வந்த உங்களது போலி தேசியவாதம்தான் என்பதை உணருங்கள்.முட்டாள்களுக்கு இதுவும் புரியாவிட்டால் இந்த நாட்டை இனி கடவுளாலும் காப்பாற்ற முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான
காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Teleton : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.

SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Sj SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage

Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

மூதூர் நகர் பகுதிக்கான அனர்த்த நிதியம் உருவாக்கல்

(எப்.முபாரக்)

மூதூருக்கான அனர்த்த நிதியம் ஒன்றை உருவாக்கும் கலந்துரையாடல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் இடம்பெற்றது.

மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.எ. அரூஸ் உட்பட முன்னாள் பிரதேச செயலாளரும் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருமாகிய எம்.சி.எம். ஷெரீப் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிருவாக உத்தியோகத்தர் மூதூர் பொது சுகாதாரவைத்திய அதிகாரி, மூதூர் மஜ்லிஸுஸ் ஸுறா சபை, பள்ளிவாசல்கள் சம்மேளனம், உலமா சபை - மூதூர், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், வர்த்தக சங்கம், சமூக நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலோடு இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது சபையோரினால் மூதூர் நகர்ப்பகுதிக்கான அனர்த்த நிதியம் உருவாக்கம் தொடர்பாகவும் அதன் கட்டமைப்பு தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டு முன்னாள் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் எம்.சி.எம். ஷெரீப் அவர்களின் தலைமையில் பதினாறு பேர் உறுப்பினர்களைக் கொண்ட தற்காலிக செயற்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்போது சபையில் கலந்துகொண்டோரினால் இந்நிதிய உருவாக்கத்திற்காக ஆறு இலட்சம் ரூபாய் உறுப்பினர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இக்குழுவினூடாக மூதூரிலுள்ள அனைத்து சமூக நிறுவனங்களினது அங்கத்துவத்தையும் உள்ளடக்கியதாக மூதூர் நகர்ப்பகுதிக்கான நிரந்தர அனர்த்த நிதியம் ஒன்றை உருவாக்கும் பணி மிக விரைவில் நடைபெறும்.

இதன் தொடராக பிரதேச செயலாளரின் தலைமையில் எதிர்வரும் 2021.05.31ஆம் திகதி திங்கட் கிழமை தோப்பூர், சம்பூர், மேன்கமம் ஆகிய பகுதிகளுக்கும் அதன் அருகிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை இணைத்து இவ்வாறான அனர்த்த நிதியம் உருவாக்கப்படவுள்ளது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக மூதூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவலை கருத்திற்கொண்டு அரசு மனித உயிர்களுக்கு முன்னுரிமை அளித்து தீர்மானம் எடுக்க வேண்டும்

(துறையூர் சஞ்சயன்)

மனித உயிர்களா பண வருமானமா ? என்று முன்னுரிமை அடிப்படையில் பார்த்தால் மனித உயிர்களையே முதன்மைப்படுத்த வேண்டும். ஆகவே, கொரோனா தொற்றுப் பரவலை கருத்திற்கொண்டு அரசு மனித உயிர்களுக்கு முன்னுரிமை அளித்து தீர்மானம் எடுக்க வேண்டும் என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுப் பரவல் சூழ்நிலையில் ஆரையம்பதி ஆடைத் தொழிற்சாலை இயங்க வேண்டுமா என வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரையம்பதி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்பட்டுள்ள நிலையில், இன்னும் எத்தனை பேருக்குத் தொற்று ஏற்படவுள்ளது என்பதையும் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அம்பிளாந்துறை, அரசடித்தீவு, தாண்டியடி, மகிழவட்டவான், நரிப்புல் தோட்டம் கிராமங்களைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய ஏறத்தாழ 20 ஊழியர்கள் தொற்றுக்குள்ளாகி இருப்பதாகவும் பிந்திய பி.சி.ஆர் பரிசோதனையின் பிரகாரம் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களில் 79 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இத்தொழிற்சாலையில் சுமார் 5000 ஆளணியினர் பணியாற்றுவதாக அறியப்படுகிறது.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு அபிவிருத்திக்குழுத் தலைவருமான சந்திரகாந்தன் ஊடகங்கள் முன்னிலையில், தொழிற்சாலையை மூடுவதால் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது என்று பொறுப்பற்ற கருத்தினைக் கூறியவர் இதற்கான மாற்றுப் பரிகாரம் தொடர்பாக என்ன நினைக்கிறார் என்று அறியமுடியவில்லை.

அரசு நாட்டை முழுமையாக முடக்க விரும்பவில்லை. அவ்வாறு முடக்கினால் ஒரு நாளில் 140 கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித்கப்ரால் கணக்குச் சொல்லுகிறார். அவர் பொருளாதாரப் பார்வையில் நிற்கிறார். ஆனால் எதிர்வரும் ஜூன் மாதத்தில் உயிர் இழப்புகள் ஆயிரக் கணக்கில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதேவேளை இலங்கை சிவப்பு எச்சரிக்கைக் குரிய நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, யப்பான் நாட்டு மக்கள் இலங்கை செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆரையம்பதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை, ஏழை மக்கள் பலருக்குத் தொழில்வாய்ப்பு அளித்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. இந்த இடத்தில் ஆலை நிருவாகங்களைப் பாராட்டுவதுடன், ஆலை ஊழியர்களுக்கு அரசானது கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு வழி செய்யவும் வேண்டும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மூலம் வருமானத்தை ஈட்ட நினைத்து வெளிநாட்டு கொரோனா வைரஸினை இறக்குமதி செய்து விட்டோம். பிரித்தானியா, இந்தியாவில் அழிவை ஏற்படுத்திய உருமாற்றம் பெற்ற கிருமிகளும் இலங்கை மக்களைத் தாக்கி வருகின்றன. எனவே தொழிற்சாலைகளின் இயக்கம், வெளிநாட்டார் வருகை விடயத்தில் அதிக கட்டுப்பாடுகளை அரசு விதித்து, கொரோனாத் தடுப்பூசிகளின் இறக்குமதியை அதிகரிக்க வேண்டும். எல்லாம் இலவசமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

அதேவேளை, கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதிலும் சீரான முறைமை பின்பற்றப்படுகிறதா ? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தாதியர்கள் இவ்விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக தாதியர் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார். எனவே, இதிலும் அரசியல் செல்வாக்குகள் கையாளப்படுகிறதா ? எனச் சந்தேகம் எழுகின்றது. தொழில் வாய்ப்புகள், வீடுகள் வழங்குவதிலும் அரசியல் செல்வாக்கு மேலோங்கி நிற்பதாக மக்கள் முறையிடுவதும் அதிகரித்து வருகின்றது. எது எப்படியாக இருந்தாலும் இப்போதைய அவசிய அவசரக்கடமை கொரோனா பலி கொள்ளலில் இருந்து மக்களைப் பாதுகாப்பதாகும். ஏனைய அனைத்துப் பணிகளும் அடுத்த பட்சமேயாகும்.

கொரோனா விடயத்தில் நிபுணத்துவ அறிவுள்ள மருத்துவச்சங்கம், இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்சினி பெர்னான்டோப்பிள்ளை ஆகியோரின் கருத்துக்களை அரசு தட்டிக் கழிக்கக்கூடாது என்றார்.

செங்கல் சூழை சரிந்து விழுந்ததில் ஒருவர் பலி

(ஏறாவூர் நிருபர்)

செங்கல் சூழை சரிந்து விழுந்து சூழையின் உரிமையாளர் உயிரிழந்த சம்பவமொன்று நேற்று மட்டக்களப்பு பாலாமடு பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

பன்குடாவெளி-பாலர்சேனை பகுதியைச்சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய முத்தன்தர்மராசா என்பவரே பலியானவர்.

மிக நீண்டகாலமாக செங்கல் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுவந்த இவர் அதிகாலை வேளையில் சூழையை சீர்செய்துகொண்டிருந்தபோது ஆறு அடுக்கு கற்கள் சரிந்து இவர் மீது விழுந்துள்ளன.

இதனால் தலையில் காயமடைந்த இவர் செங்கலடியிலுள்ள தனியார் வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பியுள்ளார்.

அதிலிருந்து சற்றுநேரத்தில் நெஞ்சுப்பகுதியில் வலியேற்பட்டுள்ளது. இதையடுத்து செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிலமணிநேரத்தில் மரணமடைந்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தார்.

இதன் பின்னர் சடலம் பீ.சீ.ஆர் மற்றும் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.கரடியனாறு பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குச்சவெளி பிரதேச சபையின் 38வது மாதாந்த சபை அமர்வு

(எப்.முபாரக்)

குச்சவெளி பிரதேச சபையின் 38வது மாதாந்த சபை அமர்வு தவிசாளர் ஏ.முபாறக் அவர்களின் தலைமையில் உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் பங்கேற்புடன் நேற்று வெள்ளிக்கிழமை கொவிட்19 சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி ஆரம்பமாகியது.

சபை அமர்வின் போது கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக புல்மோட்டை,நிலாவெளி மற்றும் புடவைக்கட்டு போன்ற பகுதிகளிலிருந்து மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன.

இத்தாக்கத்திலிருந்து எமது மக்களை பாதுகாக்க வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் துரைரெட்ணசிங்கம் மற்றும் புத்தளம் நகரபிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஆகியோரின் இழப்பிற்கு குச்சவெளி பிரதேசசபையின் ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிக்கப்பட்டன.

இதன் போது சபை அமர்வில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

01. கொவிட்19 தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட அரச ஊழியர் அல்லாத குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்க தனிவட்டார உறுப்பினர்கள் கொண்ட வட்டாரங்களுக்கு தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வீதமும் மற்றும் இரட்டை வட்டார உறுப்பினர்கள் கொண்ட வட்டாரங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா வீதமும் சபை நிதியிலிருந்து வழங்க தீர்மானிக்கப்பட்டது.

02. பிரதேச மட்டத்தில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை முறைப்படி பேணும்பொருட்டு தரம் பிரித்து திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான விசேட செயற்திட்டமாக சுமார் ஒரு லட்சம் கழிவு பொலித்தீன் பைகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது

03. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் சுமார் 500 திண்மக் கழிவுத் தொட்டிகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

04. நிலாவெளி பகுதியில் பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் Speciality Centre அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

05- பிரதேச சபை மற்றும் மத்திய அரசாங்கத்தால் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வீதிகளுக்கு வீதி அபிவிருத்தி பணிகளின் போது சம்மந்தப்பட்ட வீதியின் இருபக்கமும் உள்ள குடியிருப்பாளர்கள் தங்களின் வேலிகள் மற்றும் சுற்று மதில்களை அகற்றி வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

திருமலையில் அசாதாரண காலநிலை 18 வீடுகள் சேதம்;73 பேர் பாதிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கடும் காற்று காரணமாக 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும், 73 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

இம்மாதம் 21.05.2021 தொடக்கம் 26.05.2021 வரையான காலப் பகுதியின் ஊடான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை திருகோணமலை மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக கந்தளாய் பிரதேசத்தில் 5 வீடுகளும்,சேருவில பிரதேசதில் 8 வீடுகளும், குச்சவெளி பிரதேசத்தில் மூன்று வீடுகளும் தம்பலகாமம் பிரதேசத்தில் இரண்டு வீடுகளும், பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் 19 குடும்பங்களைச் சேர்ந்த 73 உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவித்தார்.



போதுமக்களின் ஒத்துழைப்பு தற்போது திருப்திகரமாகவுள்ளது

கல்முனை சுகாதார பிராந்தியத்தில் மூன்றாவது அலையின் தாக்கம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறு குறைவாக உள்ளது. ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகின்ற போது இந்தப் பிராந்தியத்தில் மக்கள் விழிப்பாக நடந்துகொண்டார்கள். அது மாத்திரமன்றி ஒப்பீட்டு ரீதியில் மக்களின் ஒத்துழைப்பும் முன்னரை விட திருப்திகரமாகவே உள்ளது.
இவ்வாறு கூறுகிறார் தேசிய டெங்கு தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரியும் கல்முனை பிராந்திய முன்னாள் தொற்றுநோய் தடுப்பியலாளருமான வைத்தியகலாநிதி டாக்டர் நாகூர் ஆரிப்.

தேசிய டெங்கு தடுப்பு பிரிவின் வைத்திய அதிகாரி டாக்டர் நாகூர் ஆரிப்.

சாய்ந்தமருதைச்சேர்ந்த டாக்டர் நாகூர் ஆரிப் ஒரு நடுநிலையான முற்போக்குவாதி. எதையும் ஆழமாகச்சிந்தித்து செயற்படும் அவர் கல்முனைப்பிராந்தியத்தில் சுகாதாரத்துறையில் பல்வேறு பதவிகளை வகித்து தற்போது தேசிய டெங்குத் தடுப்புப்பிரிவின் பொறுப்பு வைத்தியஅதிகாரியாக பதவியுர்வுபெற்றுக் கொழும்பு சென்றிருக்கிறார்.
அவரது நேர்காணலை இங்கு தருகிறோம்.

கேள்வி **கொரோனா 3 வது அலை கல்முனை பிராந்தியத்தில் குறைந்த தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம் என்ன?**

இதற்கு பல காரணங்களை சொல்லலாம். முக்கியமாக கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதிக்குப் பின்னரான மூன்றாவது அலையின் அதிகரிப்பு புதுவருட நிகழ்வுகளோடு தொடர்புற்றிருக்கிறது. இவ்வாறான ஒரு நிலமை ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பில் அரசாங்கம் மக்களுக்கு தொடர்ச்சியான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கிவந்தது. எனினும் மக்கள் அதனை சரியான முறையில் பின்பற்றாததால் தான் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. அதிலும் விசேடமாக இரண்டாவது அலையின் போது அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட கல்முனை சுகாதார பிராந்தியத்தில் மூன்றாவது அலையின் தாக்கம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறு குறைவாக உள்ளது. சித்திரைப் புதுவருட நிகழ்வுகள் பெரியளவில் மக்கள் ஒன்றுகூடி நடந்ததாக பரவலாக காணப்படவில்லை. ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகின்ற போது இந்தப் பிராந்தியத்தில் மக்கள் விழிப்பாக நடந்துகொண்டார்கள் என்று சொல்லலாம்.

கடந்த காலங்களில் குறிப்பாக இரண்டாவது அலையின் போது எடுக்கப்பட்ட இறுக்கமான நடவடிக்கைகளும் ஒரு காரணமாக இருக்கலாம். அக்காலப்பகுதியில். அந்நடவடிக்கைகள் ஒரு சிலரினால் வித்தியாசமான கோணங்களில் விமர்சிக்கப்பட்டிருந்தாலும். அதனுடைய சாதகமான விளைவை மக்கள் இப்போது கண்கூடாக காண்கின்றார்கள்.

அது மாத்திரமன்றி ஒப்பீட்டு ரீதியில் மக்களின் ஒத்துழைப்பும் முன்னரை விட திருப்திகரமாகவே உள்ளது. ஒன்றிரண்டு ஏற்புடையதல்லாத சம்பவங்கள் பதிவாகியிருந்தாலும் பொதுவாக மக்களின் ஒத்துழைப்பில் திருப்தியான மாற்றம் உள்ளது என்று சொல்லலாம்.

மேலும் சுகாதார திணைக்கள சேவை வழங்குநர்கள் குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக குழாமினரின் அர்ப்பணிப்பான சேவையும் ஒரு காரணமாகும். வெளியிடங்களோடு தொடர்புபட்ட ஒன்றிரண்டு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தாலும் அவர்களிடமிருந்து ஏனையோருக்கு பரவிவிடாமல் உரிய நேரத்தில் தனிமைப்படுத்தல் தொடர் பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை இரவு பகல் பாராது முன்னெடுக்கின்றார்கள். குறிப்பாக ரமழான் பண்டிகை காலத்தில் அவர்களுடைய பங்களிப்பு மிகவும் அர்ப்பணிப்புமிக்கதாகும்.

இவ்வாறான காரணங்களினால் தான் இன்று வரை மூன்றாவது அலையின் தாக்கம் கல்முனை சுகாதார பிராந்தியத்தில் குறைவான நிலையில் உள்ளது. இந்த நிலையை தொடர்ச்சியாக தக்கவைக்க மக்கள் தொடர்ந்தும் தமது பங்களிப்பை மென்மேலும் அதிகரிக்க வேண்டும்.

கேள்வி **சமகால கொரோனா சுகாதார சேவைகள் கல்முனையில் திருப்திகரமாக உள்ளதா?**

ஆமாம் நிச்சயமாக திருப்திகரமாக உள்ளது. அதனால் தான் மூன்றாவது அலை ஆரம்பித்து பல வாரங்கள் கடந்து விட்ட நிலையிலும் கல்முனை சுகாதார பிராந்தியம் இன்னும் ஆபத்து குறைந்த பிரதேசங்களுள் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. சுகாதாரத் துறையினரின் அர்ப்பணிப்புமிக்க சேவை பொலிஸ் மற்றும் இராணுவத்தின் பங்களிப்பு எல்லாவற்றிற்கும் மேலாக மக்களின் ஒத்துழைப்பு திருப்திகரமாக உள்ளது.

கேள்வி **தொற்று நோயாக உள்ள கொரோனாவை எமது பிரதேசத்தில் இருந்து முற்றிலும் ஒழிக்க வேண்டுமானால் எத்தகைய விசேட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நம்புகின்றீர்கள்?**

கைகளை சுத்தம் செய்தல் முகக்கவசம் பாவித்தல் சமூக இடைவெளியை பேணுதல் என்ற மூன்று அடிப்படையான விடயங்களையும் நூறு வீதம் கடைப்பிடிக்க வேண்டும். அவசியமில்லாமல் வீடுகளை விட்டு வெளிச்செல்லாதிருக்க வேண்டும். தேவையற்ற ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டும். அவசியம் கருதி தொற்று அதிகமாக உள்ள பகுதிகளுக்கு கடந்த பதினான்கு நாட்களுக்குள் சென்று வந்திருந்தால் அல்லது அப்பகுதியைச் சேர்ந்தவர்களோடு நெருக்கமாக தொடர்புற்றிருந்தால் தம்மை சுயமாக தனிமைப்படுத்திக்கொண்டு தமது பகுதிக்குரிய பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்து அவர்களது அறிவுறுத்தலுக்கிணங்க நடந்துகொள்ள வேண்டும். பரிசோதனைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனோடு தொடர்புபட்ட தகவல்களை மறைக்கக்கூடாது.

குறிப்பாக தொற்று அதிகமாக பரவும் இடங்களில் இருந்து யாராவது தமது பிரதேசங்களுக்கு வருகை தந்ததாக தெரியவந்தால் அது பற்றி தமது பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்க வேண்டும்.

ஒருவருக்கு கொவிட்-19 நோய்க்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக தன்னை வீட்டில் உள்ள ஏனையோரிடம் இருந்து சுய தனிமைப்படுத்திக்கொள்வதுடன் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறேஇ நோய் தொற்றுக்குள்ளான ஒருவருடன் கடந்த பதினான்கு நாட்களுக்குள் நேரடியாக தொடர்புற்றிருந்தாலும் தன்னை வீட்டில் அடுத்த பதினான்கு நாட்களுக்கு சுய தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். தமது பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

கேள்வி **அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் இனவாத பிரதேசவாத கண்ணோட்டத்தில் சிலர் பதிவிடுவது பற்றி என்ன கூற வருகிறீர்கள்?**

உண்மையில் அது கண்டிக்கத்தக்க விடயமாகும். கொவிட்-19 தொற்றுநோயானது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மாத்திரமன்றி உலகம் பூராகவும் பரவிக்கொண்டிருக்கின்றது. மக்கள் மத்தியில் அந்நோய் பரவுவதனைத் தடுப்பதற்கு அரச மற்றும் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரமே சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் செயற்படுகிறார்கள். அது அந்நோயின் பரவும் தன்மைக்கு ஏற்றவாறு மென்மையாகவும் கடுமையாகவும் இருக்கலாம். எது எப்படியிருப்பினும் தடுப்பு நடவடிக்கைகளின் அடிப்படை நோக்கமானது மக்களை இந்த தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பதே ஆகும்.

எனவே பொதுவான செயற்பாடுகள் பரவலாகவோ அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாகவோ முன்னெடுக்கப்படுகின்ற போது தனி நபர் சம்பந்தப்பட்ட விடயம் போல அதனை விமர்சிப்பது கண்டிக்கத்தக்க விடயம் மாத்திரமல்ல அது நிறுத்தப்படவும் வேண்டும்.

நேர்கண்டவர்:
வி.ரி.சகாதேவராஜா

கொவிட-19 தொற்றுநோயானது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மாத்திரமன்றி உலகம் பூராகவும் பரவிக்கொண்டிருக்கின்றது. மக்கள் மத்தியில் அந்நோய் பரவுவதனைத் தடுப்பதற்கு அரச மற்றும் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரமே சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் செயற்படுகிறார்கள். அது அந்நோயின் பரவும் தன்மைக்கு ஏற்றவாறு மென்மையாகவும் கடுமையாகவும் இருக்கலாம். எது எப்படியிருப்பினும் தடுப்பு நடவடிக்கைகளின் அடிப்படை நோக்கமானது மக்களை இந்த தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பதே ஆகும். எனவே பொதுவான செயற்பாடுகள் பரவலாகவோ அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாகவோ முன்னெடுக்கப்படுகின்ற போது தனி நபர் சம்பந்தப்பட்ட விடயம் போல அதனை விமர்சிப்பது கண்டிக்கத்தக்க விடயம் மாத்திரமல்ல அது நிறுத்தப்படவும் வேண்டும்.

திருமலை கடலில் காணாமல் போன 3 மீனவர்களையும் தேடும் பணி தொடர்கிறது

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை திருக்கடலூர் பகுதியில் காணாமல் போன மூன்று மீனவர்களை தேடும் பணிகள் 6வது நாளாக நேற்று இடம் பெற்று வருகின்றது.

திருக்கடலூர் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் கடலுக்கு படகில் சென்ற மூன்று மீனவர்கள் இன்னமும் கரை திரும்பவில்லை.

இவர்களை தேடும் பணியில் திருக்கடலூர் விபுலானந்தா கடற்றொழிலாளர் சங்கத்தினர் ஆறாவது நாட்களாகவும் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாக

இவ்வாறு காணாமல் போன மீனவர்கள் ஜெயசங்கர் சஞ்சீவன் (21) ஜீவரெட்ணம் சரன்ராஜ்(34) சிவசுப்ரமணியம் நதுசன் (21) என்பவர்களே படகில் சென்றவர்களாவர்.

இவர்களைத் தேடி பல படகுகள் ஆழ்கடலுக்கு சென்றும் இவர்களை இன்னும்

கண்டுகொள்ள முடியவில்லையெனவும் விபுலானந்தா கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் தங்கவேலாயுதம் கமல் தெரிவித்தார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மூன்று மீனவர்களின் குடும்பத்திற்கு திருகோணமலையை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இன்றைய தினம் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

இதன் போது பாதிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கடந்த 6 நாட்களாக கடலுக்குச் சென்று தங்களுடைய பிள்ளைகள் இன்னும் வீடு திரும்பவில்லை எனவும் மிக விரைவில் அவர்களை மீட்டுத் தருவதற்கு உரிய நடவடிக்கைகளை மீன்பிடி திணைக்களமும் மீன்பிடி அமைச்சரும், அனர்த்த முகாமைத்துவ திணைக்களமும் இணைந்து மீட்டுத் தருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களை சமுக அபிவிருத்தி கட்சியின் பொதுச்செயலாளர் குகதாஸ் பிரகாஷ் நேரில் சென்று பேசியதுடன், ஆறுதல் வழங்கியதையும் காணக் கூடியதாக இருந்தது.

நாட்டின் சவாலான சந்தர்ப்பங்களில் மக்கள் வங்கியின் பங்களிப்பு மகத்தானது;பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

இலங்கை சமூகம் இதுவரை முகங்கொடுக்காத வகையிலான சவால்களை எதிர்கொண்டசந்தர்ப்பத்தில் தேசிய பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கு மகத்தான பங்களிப்பு செய்த மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கியை நாட்டு மக்கள் நேசிக்கின்றனர் என நிதியமைச்சரும் கௌரவ பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் புதிய தலைமை அலுவலக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு காணொளி தொழில்நுட்பம் ஊடாக அலரி மாளிகையிலிருந்து கலந்து கொண்டபோதே கௌரவ பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

44 ஆண்டுகளாக சித்தம்பலம் கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள அலுவலகம் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகமாக காணப்பட்ட நிலையில், தற்போது 100 வீதம் பசுமை கருத்திட்டத்தின் கீழ் 03 நிலக்கீழ் தளங்களையும் 23 தளங்களையும் கொண்ட புதிய தலைமை அலுவலகம் நவீன வசதிகளுடன் கூடியதாக கொழும்பு இப்பன்வல சந்திக்கு அருகே நிர்மாணப் பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்ட கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நவீன தொழில்நுட்பம் ஊடாக அதன் நினைவு பலகையை திறந்து வைத்தார்.

இதன்போது கௌரவ பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு,

மக்கள் வங்கியின் புதிய தலைமை அலுவலக கட்டிட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மக்கள் மத்தியில் உரையாற்ற கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, உங்களது அருகில் வராது தொலைவில் இருந்து உரையாற்றுவது ஏன் என்பதை நீங்கள் அறவீர்கள். அது முழு உலகமும் முகங்கொடுக்கும் இத்தொற்று நிலைமை காரணமாகும். முழு உலகமும் தொற்று நிலைக்கு முகங்கொடுத்திருப்பினும் நாம் நாட்டின் எதிர்காலம் குறித்து கொண்டுள்ள எதிர்பார்ப்புகளை கைவிடவில்லை.

இத்தொற்றை எதிர்கொள்ளும் அதே வேளை நாம் நாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம். அவ்வாறு எதிர்காலம் குறித்து சிந்திப்பதனாலேயே இவ்வாறான பாரிய நிர்மாணப் பணிகள் இச்சந்தர்ப்பத்தில் ஆரம்பிக்கப்படுகின்றன.

உலகின் மிக மோசமான யுத்தத்திற்கு முகங்கொடுத்திருந்த சந்தர்ப்பத்திலும், நாம் நாட்டில் துறைமுகம், விமான நிலையம், அதிவேக நெடுஞ்சாலை போன்றவற்றை அமைத்தோம். அதனால் இவ்வாறான சவால் மிகுந்த சந்தர்ப்பங்களிலும் பணிகளை இடைநிறுத்தாது முன்னெடுத்து செல்ல நாம் நன்கு பழக்கப்பட்டுள்ளோம்.

அதனால் இன்று நவீன வசதிகளுடன் கூடியதாக நிர்மாணிக்கப்படும் இக்கட்டிடம் 03 நிலக்கீழ் தளங்கள் மற்றும் 23 தளங்களை கொண்டுள்ளதாக எனக்கு அறியக் கிடைத்தது. இதனை 100 சதவீதம் பசுமை கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

வங்கியுடன் தொடர்புபடாதிருந்த பொதுமக்களுக்காக தேசிய வங்கியொன்றை கட்டியெழுப்பு வேண்டிய தேவை அக்காலத்தில் ஏற்பட்டது.

1960 ஜூலை மாதம் கௌரவ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் பிரதமராகவிருந்த அரசாங்க காலப்பகுதியில் வர்த்தக, உணவு மற்றும் கப்பல்துறை அமைச்சராகவிருந்த கௌரவ டீ.பீ.இலங்கரத்ன அவர்களே மக்கள் வங்கி சட்டமூலத்தை சமர்ப்பித்தார்.

அச்சட்டம் 1961 மே 30 சட்டபூர்வமாக்கப்பட்டு, 1961 ஜூலை 1ஆம் திகதி மக்கள் வங்கியின் வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம், அதுவரை ஒரு சில ஆங்கில மொழி பேசுபவர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கி முறை, சிங்கள மற்றும் தமிழ் பேசும் பெரும்பான்மை மக்களுக்கு திறக்கப்பட்டது. இதன் விளைவாக, நாடு முழுவதும் கிளைகளை நிறுவுவது துரிதப்படுத்தப்பட்டது.

அப்போதிருந்து இன்றுவரை மக்கள் வங்கி மக்களை நிதி ரீதியாக மேம்படுத்தியதுடன், நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களித்து ஆறு தசாப்தங்களில் நீண்ட தூரம் பயணித்துள்ளது.

இன்று, மக்கள் வங்கியின் 741 கிளைகள் மற்றும் சேவை மையங்கள் நாடு முழுவதும் உள்ளன. இது நாட்டின் மிகப் பெரிய கிளை வலையமைப்பாகும். 14 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்ட நாட்டின் மிகப் பெரிய நிதி சேவை வழங்குநராக மக்கள் வங்கி விளங்குகிறது.

ஒரு பொறுப்புள்ள அரசு வங்கியாக, மக்கள் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதில் மட்டுப்படுத்தப்படவில்லை. நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு அளித்த பங்களிப்பு அற்பமானது அல்ல. ஒரு அரச வங்கியாக, ஏற்றுமதி, கல்வி, சுகாதாரம், அதிவேக நெடுஞ்சாலைகள், வீதி, சுற்றுலா மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய துறைகளில் நிதி உதவி வழங்குவதன் மூலம் கடந்த 60 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மக்கள் வங்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், சுனாமி, வெள்ளம் மற்றும் வரட்சி போன்ற இயற்கை பேரழிவுகளின் காலத்திலும், முப்பது ஆண்டுகால போரினால் இடம் பெயர்ந்த மக்களுக்கும் இவ் வங்கி உதவியுள்ளது. குறிப்பாக கடந்த ஆண்டு, கொவிட் 19 நெருக்கடி காரணமாக இலங்கை சமூகம் இதுவரை முகங்கொடுத்திராத வகையிலான சவால்களை எதிர்கொண்டபோது, தேசிய பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கு மக்கள் வங்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

மக்கள் வங்கி இதுவரை 2.2 டிரில்லியன் ரூபாய் இருப்பை கொண்ட ஒரு பாரிய நிறுவனமாகும். இதன் மொத்த வைப்பு தொகை 1.8

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் ஆறு இளைஞர்கள் கைது

(ந.குகதரசன்)

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆறு இளைஞர்கள் பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்களுடன் வாழைச்சேனை பொலிஸாரும் இணைந்த நடாத்திய சோதனையின் போதே இந்த ஆறு சந்தேக நபர்களும் அவர்களிடம் இருந்த போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் இருந்து 890 மில்லிகிராம் ஹெரோயின்மற்றும் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள்என்பனகைப்பற்றப்பட்டதுடன் இவர்கள் 21,25,26,28,31,35 வயதுடையவர்கள் என்றும் இவர்கள் வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை, காவத்தமுனை, கேணிநகர் பிரதேசங்களைசேர்ந்தவர்கள்என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் பகிஷ்கரிப்பில் ஈடுபட முடிவு

(பைஷல் இஸ்மாயில்)

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் சங்கத்தின் கோரிக்கைகள் நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் 01 ஆம் திகதி நண்பகல் 12.00 முதல் 1.00 மணிவரை அடையாள பணிப் புறக்கணிப்பு செய்ய சங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே தங்கள் வைத்தியசாலைகளில் இக் கோரிக்கைகளை வென்றெடுக்க அனைத்து தாதியர்களையும் ஒன்றிணைத்து தயார்படுத்துமாறு அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த வகையில் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தினால் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் பின்வருமாறு,

1. தாதிய உத்தியோகத்தர்களின் குடும்பத்தினருக்கும் ஏனைய சுகாதாரத் துறையினரின் குடும்பத்தினருக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றல்.

2. அனைத்து தாதியருக்கும் ரூபா 5,000 ரூபா இடர் கொடுப்பனவு வழங்குதல்.

3. புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 4,000 தாதிய உத்தியோகத்தர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றல்.

4. கர்ப்பிணி தாதிய உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை வழங்கல்.

5. கொவிட் பரிசோதனை பிரிவில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு போதிய இணைந்த நடாத்திய சோதனையின் போதே இந்த ஆறு சந்தேக நபர்களும் அவர்களிடம் இருந்த போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் இருந்து 890 மில்லிகிராம் ஹெரோயின்மற்றும் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள்என்பனகைப்பற்றப்பட்டதுடன் இவர்கள் 21,25,26,28,31,35 வயதுடையவர்கள் என்றும் இவர்கள் வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை, காவத்தமுனை, கேணிநகர் பிரதேசங்களைசேர்ந்தவர்கள்என்பதும் குறிப்பிடத்தக்கது.

6. பயணத்தடை காலத்தில் தாதிய உத்தியோகத்தர்களுக்கு கடமைக்கு வருகை தருவதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

7. கொரோனாசிகிச்சைமையங்களிலும் ஏனைய சுகாதார சார் நிறுவனங்களிலும் கடைமை புரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு மீ 95 முகக் கவசம் மற்றும் உரிய பாதுகாப்பு உடைகள் வழங்கப்பட வேண்டும்.

எனவே எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் குடும்பத்தினருக்கான தடுப்பூசி ஏற்றலுக்கு மட்டுமே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கோரிக்கைகளான இடர்கால கொடுப்பனவு, கர்ப்பிணி தாதியருக்கான விடுமுறை தொடர்பான சுற்று நிருபம் வெளியிடப்பட்டும், அதனை நடைமுறைப்படுத்தாமை போன்ற ஏனைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையால் 25 ஆம் திகதி மாலை முதல் வைத்தியசாலைகளிலும் ஏனைய சுகாதார சார் நிறுவனங்களிலும் தாதியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைச் செயற்பாடுகளிலிருந்து தாதிய உத்தியோகத்தர்கள் முற்றாக விலகியிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் அறியத்தருகின்றது.

சம்மாந்துறையில் ஆற்றிலிருந்து கைத்துப்பாக்கி மீட்பு

(பாறூக் ஷிஹான் ,நூருல் ஹூதா உமர்)

சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை கல்லரிச்சல் பைந்தாற்றில் அமெரிக்க தயாரிப்பு இயங்கு நிலை கைத்துப்பாக்கி ஒன்று கடந்த வியாழக்கிழமை அதிகாலை லொறியில் மண் ஏற்ற சென்றவர்களினால் கண்டெடுக்கப்பட்டு நேற்று சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு பல்கலை.உளச்சார்பு பரீட்சை விண்ணப்பம் நீடிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை இளங்கலைமாணி மொழிபெயர்ப்பு சிறப்புக் கற்கைநெறிக்குரிய (2020/2021) உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான முடிவுத் திகதி 12.06.2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் (pdf), வங்கிப் பற்றுச்சீட்டு, க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தின் பிரதி ஆகியவற்றைப் பதிவுத் தபாலில் அனுப்ப முடியாதவர்கள் அவற்றை ஸ்கேன் (scan) அல்லது புகைப்படப் (photo) பிரதி எடுத்து head_languages_fac esn.ac.lk இற்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: 065 2240971

குடும்பப்பெண் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு: மண்டூர் பிரதேசத்தில் சம்பவம்

அறையில் தனக்குத்தாகே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது மகளுடன் ஏற்பட்ட தகராற்றினால் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தனக்குத்தானே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் வீட்டின் அறையின் கதவு பூட்டப்பட்டிருந்த நிலையில் கதவினை உடைத்து உட்சென்று பார்த்தபோது குறித்த பெண் தூக்கில் தொங்கிய நிலையிர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தமிழர்களை நசுக்கும் செயற்பாடு

த.கலையரசன் எம்.பி.தெரிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பு அடிப்படையில் 240 க்கு மேற்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்பட்டதில் தமிழரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லையே என வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கோத்தபாய அரசாங்கம் தமிழர்கள், தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கடும் போக்குடன் செயற்படுகிறது. இந்த நாட்டில் போர்க்குற்றங்கள் செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தளபதிகளாக இருந்து படைகளை வழிநடத்தியவர்கள்அரசாங்கத்துடன் இணைந்து வெளியில் சுதந்திரமாக நடமாடி செயற்படுகிறார்கள்.

அரசாங்கத்தோடு இணைந்தவர்களுக்கு பூரண பாதுகாப்பு கொடுத்து அவர்களுடாகவே எம் தமிழ் இனத்தை நசுக்குகின்ற செயற்பாடுகளையே அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. தளபதிகளால் வழிநடத்தப்பட்ட போராளிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே, இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்கு யார் வாய்ப்பாக அமைகிறார்களோ அவ்வாறானவர்களின் வாய்ப்புகளை பயன்படுத்தி அவர்களுக்கு சாதகமான விடயங்களே அரசினால் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என தொடர்ச்சியாக அழுத்தங்களையும் போராட்டங்களையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழ் மக்களும் முன்னெடுத்த போதும் ஒருவர் கூட விடுதலை செய்யப்படவில்லை. ஒவ்வொரு ஆளும்கட்சி அரசியலாளர்களும் தமிழர்களை எவ்வாறு ஏமாற்ற முடியுமோ அவ்வாறு ஏமாற்றி அரசியலை முன்னெடுப்பதே ஆட்சியாளர்களின் தொடர் நடைமுறையாகவுள்ளது.

ஈழ விடுதலைப்போராட்டம் அகிம்சை ரீதியாக ஆரம்பித்து ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த காலம் தொட்டு எமது இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்ட வரலாறுகள் உள்ளன. சிறைகளில் எமது தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட வரலாறுகளும் உள்ளன. தற்போது சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள், இலங்கையிலுள்ள பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு நாடு ஒரு சட்டம் என கூறும் ஆட்சியாளர்கள் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் இனப்பாரபட்சம் காட்டுவதை காணமுடிகிறது. போர் ஓய்ந்து பன்னிரு வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய எந்த ஜனாதிபதிகளுக்கும் உள்ளம் குளிரவில்லை.

தற்போது நாட்டில் பரவும் கொரோன தொற்றுப் பரவலால் சிறைகளிலுள்ள பலர் கொரோனாவால் பாதிப்புற்றுள்ளனர். ஆனால் எமது தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் ஜனாதிபதியோ ஆட்சியாளர்களோ கணக்கெடுத்ததாக தெரியவில்லை. சிறைகளிலும் எமது தமிழ் அரசியல் கைதிகள் பல உண்ணாவிரத போராட்டங்களை நடத்தியும் எந்த வித பலனும் கிடைக்காத நிலையில், துன்ப துயரத்துடன் வாழ்வா சாவா என்ற ஏக்கத்தில் காலத்தை கடத்துகின்றனர்

இலங்கையை ஆட்சிசெய்த எந்த அரசாங்கமும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கவோ சர்வதேச சட்ட விதிகளுக்கமைய விடுதலை செய்யவோ சுதந்திரமாக வாழ வைக்கவோ அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை என்றார்.

காலநிலை மாற்றமும் இலங்கையும்

பருவ நிலை மாற்றம் என்பது உலகின் ஒரு பகுதியிலோ அல்லது உலகம் முழுவதுமோ தட்ப வெப்பநிலையில் ஏற்படும் மாற்றமாகும். இதில் தீவிர பருவ நிலை மாற்றமானது, காலநிலையில் நீண்டகால இடைவெளியில் மாற்றங்கள் ஏற்பட்டு அனர்த்தங்கள் அடிக்கடி இடம் பெறுவதால் இது நீண்ட கால மாற்றம் எனப்படும்.கால நிலை மாற்றத்திற்கு கரியமில வாயுக்கள் முக்கிய காரணமாக அமைகின்றன. உதாரணமாக காபனீரொட்சைட், நைட்ரைட் ஒட்சைட், மீதென், ஓசோன் குளோரோ புளோரோ காபன் (CFC))ஆகிய வாயுக்களைக் குறிப்பிடலாம்.

இவ் வாயுக்கள் தொழிற்சாலைகளாலும் விவசாய நடவடிக்கையின் போது பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளாலும் குளிர்சாதனப்பெட்டிகளின் பயன்பாட்டினாலும் அதிகளவில் வெளியாகின்றன. அந்தவகையில் அதிகளவில் வெளியேற்றும் நாடுகளாக அமெரிக்கா (19.70 மெற்றிக் தொன்), ரஷ்யா (11 மெற்றிக் தொன்), ஐரோப்பா (9.7 மெற்றிக் தொன்), இந்தியா (1.3 மெற்றிக் தொன்)ஆகியன காணப்படுகின்றன.தனி நபர் காபன் உமிழ்வில் சீனா,அமெரிக்கா,இந்தியா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன.

இவ்வாறு கரியமில வாயுக்கள் வெளியேற்றப்படுவதால் ஏற்படும் உடனடிப் பாதிப்புக்களாக வட,தென் துருவ பனிக்கட்டி உருகுதல், கடல்மட்டம் உயர்தல், உலக கரையோரப் பகுதி நீரில் மூழ்குதல், தரை நிலம் தாழ்வடைதல், இயற்கை அனர்த்தம் அதிகரித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். மேலும் பருவ நிலை மாற்றம் காரணமாக ஏற்படும் முதன்மைப் பாதிப்புக்களாக புவி வெப்பமயமாதல், முனைவு மற்றும் உயர்மலைப்பனி உருகுதல்,தொடர்ச்சியான வறட்சி ஏற்படல், வானிலை மாற்றம், கடல் நீர் வளம் உயர்வடைதல் என்பன ஏற்படும். காலநிலை மாற்றத்தின் பிரதானமான சவால்களாக மனித சுகாதாரம், மனித பாதுகாப்பு, வாழ்க்கைத்தரம், பொருளாதார வளர்ச்சி வீதம் முதலானவை பாதிப்படைதல், நீர் மூலமான நோய்கள்,ஊட்டச்சத்துக்குறைபாடு,மீன் இனப்பெருக்கம் பாதிப்படைதல் என்பவற்றைக் கூறலாம்.

காலநிலை மாற்றத்தின் விளைவை உடனடியாக தடுக்க முன்வைக்கும் முதன்மைத் தீர்வுகளாக கரியமில வாயு வெளியேற்றத்தைத் தடுத்தல், புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தை நோக்கி நகருதல் என்பனவாகும். உலக அளவில் புதுப்பிக்கத்தக்க சக்திகளான காற்றலை,கடலலை,சூரியசக்தி மூலம் நாடுகள் மின்வலுவை உற்பத்தி செய்கின்றன. சீனா, அமெரிக்கா,பிறேசில் இந்தியா ஆகிய நாடுகள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் மின்னுற்பத்தியை மேற்கொள்ளும் முதன்மை நாடுகளாகும்.அந்த வகையில் காற்றலை மூலம் மின்னுற்பத்தியை சீனா, அமெரிக்கா,ஜேர்மன்,இந்தியா ஆகிய நாடுகள் மேற்கொள்கின்றன. சூரிய சக்தி மூலமாக மின்வலுவை உற்பத்தி செய்யும் நாடுகளாக சீனா, அமெரிக்கா,ஜப்பான்,இந்தியா,ஜேர்மன் போன்ற நாடுகள் முன்னிலை வகிக்கின்றன

பூகோள வெப்பமயமாதலை தடுக்க கியோட்டோ ஒப்பந்தம், Cop21, Rio +201020 ஆகிய ஒப்பந்தங்கள் உலக நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருவ நிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் வகையில் உலக நாடுகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் சர்வதேச அமைப்புக்கள்

ஐநாவிற்கான பருவநிலை மாற்ற சாசன கட்டளை (UNFCC) பருவ நிலை மாற்றம் பற்றி ஆராயும் அரசுகளிற்கிடையான குழு (IPCC) போன்றனவாகும்.

காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் பிரதானமாக நெற்செய்கை,பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, பாற்பண்ணைத்தொழில் விவசாயத்தைச் சார்ந்து பாதிக்கப்படும் துறைகளாகும். காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் வட மாகாணம், வடமேல் மாகாணம் என்பனவற்றின் வெப்பநிலை உயர்வடையுமெனக் கூறப்படுகிறது. இதனால் இலங்கையில் வறுமையளவு அதிகரித்தல், சமூக சமத்துவமின்மை, மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவடைதல் போன்ற சமூகப் பாதிப்புக்கள் ஏற்படும். மேலும் பொருளாதாரம் சார் பாதிப்புக்களாக மொத்த உள் நாட்டு உற்பத்தி குறைவடையும், தனி நபர் வருமானம் குறைவடையும் நிலை ஏற்படும். மேலும் சூழலியல் மாற்றங்களாக அதிகரித்த வெப்பநிலையும் வரட்சியும் மழைவீழ்ச்சியில் மாற்றம் என்பன ஏற்படும். இம் மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் விசேட வேலைத்திட்டங்களாக இலங்கையில் உலர் வலய சிறு குளங்களைப் புனரமைத்தல், தரைக்கீழ் நீர்வளம் பேண மர நடுகை செயற்றிட்டம் (ஹரித லங்கா) உற்பத்தித் தரத்தை அதிகரிக்க நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தல், சந்தைப்படுத்தல் வசதியை விரிவாக்கம் செய்தல் என்பனவாகும். காலநிலை மாற்றத்தை தவிர்க்க இளம் சந்ததியினருக்கு முன்வைக்கப்படும் ஆக்க பூர்வமான ஆலோசனைகளாக நுகர்வு கலாசாரத்தை மாற்றியமைத்தல் (காபன் எதிர் நுகர்வு) பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள சந்தை சக்திகளை பயன்படுத்தல். உதாரணமாக கலப்புப் பிறப்பாக்கம்(Hybrid, மின்சார கார் பயன்பாடு, பூச்சிய காபன் வெளியீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தல், வலியிலுள்ள காபனைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரித்தல் ,புதுப்பிக்கத்தக்க வளப்பயன்பாட்டை அதிகரித்தல் என்பனவாகும்.மேலும் காலநிலை மாற்ற விளைவுகளை தாக்குப் பிடிக்க பொருளாதார ரீதியாக முன்னெடுக்கப்படும் ஆக்க ஊர்வமான நடவடிக்கைகளாக விவசாயத்துறை சார் தொழில் வாய்ப்பை உருவாக்குதல் காலநிலையியலுடன் தொடர்பான தொழில் வாய்ப்பை உருவாக்குதல்,சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

சுற்றுப்புறச் சூழலுக்கு ஒவ்வாத செயல்கள் செய்வதை இயன்றளவு தவிர்ப்பதன் மூலமும் தடுப்பதன் மூலமும் நாமும் நம் எதிர்கால சந்ததியினரும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களைக் குறைப்போம்.

காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் பிரதானமாக நெற்செய்கை, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, பாற்பண்ணைத் தொழில் விவசாயத்தைச் சார்ந்து பாதிக்கப்படும் துறைகளாகும். காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் வட மாகாணம், வடமேல் மாகாணம் என்பனவற்றின் வெப்பநிலை உயர்வடையுமெனக் கூறப்படுகிறது. இதனால் இலங்கையில் வறுமையளவு அதிகரித்தல், சமூக சமத்துவமின்மை, மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவடைதல் போன்ற சமூகப் பாதிப்புக்கள் ஏற்படும். மேலும் பொருளாதாரம் சார் பாதிப்புக்களாக மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவடையும், தனி நபர் வருமானம் குறைவடையும் நிலை ஏற்படும். மேலும் சூழலியல் மாற்றங்களாக அதிகரித்த வெப்பநிலையும் வரட்சியும் மழைவீழ்ச்சியில் மாற்றம் என்பன ஏற்படும்

பாலசிங்கன் சுரேனிகா
(திருகோணமலை வளாகம் , கிழக்குப் பல்கலைக்கழகம்)

அடிப்படை வாதத்தால் இலங்கை அழிவுகளையே சந்தித்தது, அபிவிருத்தியடையவில்லை

ஜி. ஸ்ரீநேசன்,
MA (அரசறிவியல்),
MEd, SLEAS

இலங்கை பல்வகைக் கலாசாரங்களைக் கொண்ட நாடாகும்.எனவே இந்த நாடு பன்மைத்துவப் பண்பாடுகளை யுடைய மக்களை ஐக்கியப்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்திருக்க வேண்டும்.சகல மக்களினதும் ஆற்றல்,திறமைகளை நாட்டின் முன்னேற்றத்திற்காக, உச்சமான அளவில் பயன்படுத்தியிருக்க வேண்டும். முற்போக்கான பாதையில் நாட்டை வழிநடாத்தியிருக்க வேண்டும். அறிவியலும், ஒழுக்கவியலும் கலந்த பாதையில் நாட்டை முன்னோக்கி செயற்றிறனுடன் நகர்த்தியிருக்க வேண்டும். ஆனால் அப்பாதையில் ஆட்சியாளர்கள் பயணிக்கவில்லை.

இலங்கை ஆட்சியாளர்கள்,இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து,பேரின அடிப்படை வாதப் பாதையில், அரசியல் இலாபத்திற்காகப் பயணித்துக் கொண்டு செல்கிறார்கள். 747 வாழுகின்ற சிங்கள மக்களின் வாக்குவேட்டையில்தான் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். ஆட்சியாளர்கள் பிரித்தாளும் தந்திரம் மூலமாக, இன முரண்பாடு, இன மோதல்களை உருவாக்கினார்கள். தமிழர்களின் சமத்துவ உரிமைகள் மறுக்கப்பட்டதால் தமிழர்கள் 30 ஆண்டுகள் அஹிம்சை போராட்டம் நடாத்தினார்கள். ஜனநாயக வழிமுறைகள் வெற்றியைப் பெற்றுத் தரவில்லை. இதனால் தமிழ் இளைஞர்கள் பெரும் பான்மை இனத்தவருக்குச் சாதகமான ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்தனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை. இதனால், தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அந்த 30 ஆண்டுகள் கால உரிமைப் போராட்டத்தால் திணறிய இலங்கை அரசு பல நாடுகளின் உதவியுடன் தமிழர் போராட்டத்தை வென்றது. ஆனால் அரசு அன்றும் இன்றும் அடிப்படை வாத அரசியல் பாதையிலே பயணிக்கிறது. விளைவு என்னவென்றால், தமிழ் பேசும் மக்களின் உயிர் பறிப்பு, சொத்துகள் அழிப்பு, கலாசார அழிப்பு என்கின்ற பாதகமான விளைவுகளே நாட்டின் பிரதிபலிப்பாக உள்ளது.

நீண்ட கால நோக்கில் நாடு ஆக்கரீதியான அபிவிருத்திப் பாதையில் செல்லவில்லை. பிற்போக்குவாதப் பிரித்தாளும் பாதையிலே அரசு பயணிக்கிறது. அபிவிருத்திகளை விட அழிவுகளையே அடிப்படைவாதம் தந்துள்ளது. ஆக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டிய வளங்கள் அழிவுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு நடைபெற்ற யுத்தத்தில் மக்கள் அழிவுகளைச் சந்தித்தார்கள். குறிப்பாகத் தமிழ் மக்கள் 1958 இல் இருந்து 2009 வரை இன அழிப்புக்குள்ளானார்கள். அழிவுகளுக்கான பொறுப்புக் கூறல், உண்மைகளைக் கண்டறிதல்,நீதியை வழங்குதல், மீண்டும் நிகழாமல் தவிர்த்தல், மனித உரிமைகளைப்பாகாத்தல், இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு என்று எதுவும் நடைபெறவில்லை.

> இன ரீதியாகக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நாடாக இலங்கை மாறி வருகின்றது. பக்கச் சார்பாகப் பொது மன்னிப்புகள் குற்றவாளிகளுக்கு வழக்கப்படுகின்றன. இந்த நாட்டு ஆட்சியாளர்கள் அடிப்படைவாதம், பிரித்தாளும் தந்தீரம், அடக்குமுறை, பிற்போக்குவாதம் என்பவற்றுக்கான பொறிமுறைகள், சூத்திரங்களைப் பயன்படுத்துகின்றார்கள். ஆக்க வழி, அபிவிருத்தி வழி, தீர்வு வழி என்பவற்றுக்கான பொறிமுறைகள் இவர்களிடம் இல்லை. இதனால் தான் நமது நாட்டுப் பிரச்சினை ஐக்கிய நாடுகள்சபை வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது

இன ரீதியாகக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நாடாக இலங்கை மாறி வருகின்றது. பக்கச் சார்பாகப் பொது மன்னிப்புகள் குற்றவாளிகளுக்கு வழக்கப்படுகின்றன. இந்த நாட்டு ஆட்சியாளர்கள் அடிப்படைவாதம், பிரித்தாளும் தந்திரம், அடக்குமுறை, பிற்போக்குவாதம் என்பவற்றுக்கான பொறிமுறைகள், சூத்திரங்களைப் பயன்படுத்துகின்றார்கள். ஆக்க வழி, அபிவிருத்தி வழி, தீர்வு வழி என்பவற்றுக்கான பொறிமுறைகள் இவர்களிடம் இல்லை. இதனால் தான் நமது நாட்டுப் பிரச்சினை ஐக்கிய நாடுகள்சபை வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஆட்சியாளர்கள் 72 ஆண்டுகளாகத் தமிழர்களை ஏமாற்றியதால், எமது உள்நாட்டுப் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. இது ஆட்சியாளர்களுக்குக் கௌரவப் பிரச்சினையாக இருக்கலாம். ஆனால்,தமிழர்களின் சுயமரியாதைக்கும், சமத்துவ இருப்புக்குமான வாழ்வியல் பிரச்சினையாக இது அமைந்துள்ளது. ஆட்சியாளர்களின் அடிப்படைவாதத்தினை விடவும், தமிழ் மக்களின் அடிப்படை யுரிமைகள் ஜனநாயக வழியில் முக்கியமானவை. ஓட்டுமொத்தமாகப் பார்த்தால் சுதந்திரத்தின் பின்னர், ஆட்சியாளர்களால் அடிப்படைவாதம் வளர்க்கப் பட்டுள்ளது.அபிவிருத்திகள், தேசிய ஒற்றுமைகள் வளர்க்கப்படவில்லை. அடிப்படைவாதம் அழிவையே தந்துள்ளது. அபிவித்தியைத் தரவில்லை. இனிமேலாவது இதனை ஆட்சியாளர்கள் உணர்ந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் கிடைக்கும். இல்லை என்றால், பாதகமான விளைவுகளே தொடர்கதையாகும்.

சர்வதேச சமூகத்தையும், ஐக்கிய நாடுகள் சபையையும் இராஜதந்திரங்களால் ஏமாற்ற முடியாது. உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியதால் சர்வதேசம் வரை இப்பிரச்சினை சென்றுள்ளது. இது ஆட்சியாளர்களின் பலவீனமாகமே அமைந்துள்ளது. ஆத்திரப்படுவதால் பயன் இல்லை. முற்போக்கான அறிவைப் பயன்படுத்தினால், வெற்றிகள் கிடைக்கும்.

வனப்பு மிக்க மட்டக்களப்பில் இயற்கையாகவே அமைந்த குருக்கள்மடம் பறவைகள் சரணாலயம்

○ சரா.ரக்ஸனா

இலங்கையில் மட்டக்களப்பு எனும் நாமம் பழம் பெரும் தொன்மையினை எடுத்து நிற்கின்றது, இலங்கையில் வேறு எந்த பிரதேசத்திலும் அமைந்திராத இயற்கையின் கொடை இம்மாவட்டத்தில் தன்னகத்தே கொண்டுள்ளது.

மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலமும், காடும் காடுசார்ந்த முல்லை நிலமும், வயலும் வயல் சார்ந்த மருத நிலமும், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமும் என நால்வகை நிலங்களும் ஒருங்கே தன்னகத்தே கொண்டமைந்தது தான் மட்டக்களப்பு மாவட்டமாகும்.

இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய வாவியான மட்டக்களப்பு வாவி மட்டக்களப்பு மாவட்டத்தினை ஊடறுத்து அம்பாறை மாவட்டம்வரைப் பாய்கின்றது. மாட்டத்திற்கே உணவளிக்கும் விவசாயம், மற்றும், மீன்பிடித் தொழிலையும் பிரதானமாக கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் இயற்கை எழில் கொழித்து நிற்கும் இந்நிலையில் வெளிநாட்டுப் பறவைகளும், மட்டக்களப்பு வனப்பு மிக்க பிரதேசத்திற்கும், இயற்கைக்கும், அழகை மேம்படுத்துகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியோரத்தில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட குருக்கள்மடத்தில், மட்டக்களப்பு வாவி ஓரமாக அமைந்துள்ள ஏத்தாழைக் குளத்தில் அமைந்துள்ளது பறவைகள் சரணாலயமாகும்.

மாட்டத்திற்கே உரித்தான நாரை, வெள்ளை, மற்றும் ஏனை நிற கொக்குகள், கடற்காகம், மற்றும், ஏனைய சிட்டுக்கள் வாழ்ந்துவரும் இப் பறவைகள் சரணலாலயத்தில் பல்லாயிரக்கணக்கான பல வண்ணங்களையுடைய வெளிநாட்டுப் பறவைகளும், உள்நாட்டுப் பறவைகளுடன் இணைந்து ஜொலிப்பதையும், இரை உண்பதையும் அவதானிக்க முடிகின்றது.

குருக்கள்மடம் ஐயனார் ஆலயத்தின் ஓரமாக அமையப் பெற்றுள்ள ஏத்தாழைக் குழத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள இப்பறவைகள் சரணாலயத்தை ஐயனார் ஆலயத்திற்கு வரும் பக்கதர்கள், மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் பயணம் செய்யும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணிகள் ஒருகணம் அவ்விடத்தில் வீதி ஓரமாக தரித்து நின்று

அப்பறவைகள் சரணாலயத்தை இரசித்துவிட்டுச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு இனங்களை யுடைய பல இலட்சக்கணக்கான பறவையினங்களை மற்றும் மட்டக்களப்புக்கே உரித்தான இந்த பறவைகள் சரணாலயத்தைப் பேணவேண்டிய தலையாய கடமை அனைவரிடத்திலும் காணப்பட்டாலும், துறைசார்ந்த அதிகாரிகளிடத்திலும் இதன் தார்மீகக் கடமை சுமத்தப்பட்டுள்ளது எனலாம்.

குருக்கள்மடம் பறவைகள் சரணாலயத்தை இன்னும் மெருகூட்டக்கூடிய வகையில் சுற்றி வர பார்வையாளர்கள் தரித்து நின்று பார்வையிடக்கூடியவாறு கொட்டகைகளையும், சுற்றிவர போக்குவரத்துச் செய்யும் பாதை மறு சீரமைப்புக்களையும், மின்விளக்குகளையும் ஒளிரச் செய்யும் பட்சத்தில் பறவைகள் சரணாலயம் மேலும் அழகுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்கள் தோறும் காணப்படும் குளங்களைத் தூர்வாரி வனப் புமிக்கதாக மாற்றும் பட்சத்தில் குருக்கள்மடம் ஏத்தாழைக்குளத்தில் இயற்கையாகவே பறவைகள் சரணாலயம் அமைந்ததுபோல் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளும், பட்சிகளின் செயற்பாடு மக்களின் பார்வைக்கு மெருகூட்டும் என்பதோடு, உள்நாட்டு. வெளிநாட்டு சுற்றுலாத் துறையினரையும் மட்டக்களப்பு மாவட்டம் மேலும் கவர்ந்திழுக்கும் எனலாம். எனவே துறைசார்ந்தவர்கள் குருக்கள்மடம் ஏத்தாழைக்குளத்தில் அமைந்துள்ள பறவைகள் சரணாலயத்தை மேலும் மெருகூட்டுவதற்கு முன்நின்று செயற்பட வேண்டும் என்பதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

கரடியனாற்றில் கொரோனா வைத்தியசாலையை வியாழேந்திரனினால் திறந்துவைப்பு

(மட்டக்களப்பு மாவட்ட நிருபர்)

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று கரடியனாறு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா நோயாளிகளுக்கான தற்காலிக வைத்தியசாலை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனினால் நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கொவிட் சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு அரசின் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் 1000 கட்டில்களை தயார்படுத்தும் செயற்பாடுகள்தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும், பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு செயலணியின் தலைவருமாகிய பசில் ராஜபக்ஸ அவர்களின் சிந்தனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் தமிழ் பிரதேசங்களுக்கான அபிவிருத்திக் குழுக்களின் பிரதித் தலைவருமான பா.சந்திரகுமார் ஆகியோரின் முன்மொழிவுக்கு அமைய ஏறாவூர்ப்பற்று கரடியனாறு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா நோயாளிகளுக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய தற்காலிக வைத்தியசாலையே இன்று உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

100 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட குறித்து தற்காலிக வைத்தியசாலையானது நோயாளர்களுக்கான மின்சார வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் மலசல கூட வசதிகள் உட்பட ஏனைய சகல வசதிகளையும் கொண்ட தற்காலிக விடுதியாக இது அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரன் உள்ளிட்ட மதகுருமார், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சர்வானந்தன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஸ், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெட்ணம், செங்கலடி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இ.ஸ்ரீநாத், ஏறாவூர்ப்பற்று பிரதேசசபையின் செயலாளர் வீ.பற்குணன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.புண்ணியமூர்த்தி சசிகலா உள்ளிட்ட துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கொவிட் பணிகளுக்கு நிதியுதவி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூபால் அப்பகுதியில் கொவிட் பணிகளில் ஈடுபடும் மூன்று நிறுவனங்களுக்கு அவரின் சொந்த நிதியிலிருந்து 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன்படி அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கிண்ணியா கிளையின் அனர்த்த நிதியத்துக்கு 75 ஆயிரம் ரூபாவும் AL-MABARRA CHARITY FUND OR-GANIZATION க்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது

இது தவிர திருகோணமலை வைத்தியசாலையின் ஜனாஸா தொடர்பான நலன்புரி அமைப்பொன்றுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இந்நிதியுதவி தவிர கொவிட் மற்றும் பொதுமுடக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான பௌதீக,பொருளாதார உதவிகளை செய்துவருகிறோம். மேலதிக உதவிகளை பெற தேவையான முயற்சிகளும் நடைபெறுகின்றன.அவை வெற்றிபெற இறைவனை பிராத்திக்கிறேன்.உங்களால் முடிந்த உதவிகளை நீங்களும் வழங்குங்கள் என தெரிவித்தார்.

கிண்ணியா மகமாறு மையவாடியில் நல்லடக்கத்திற்கான வேலைகள் மும்முரம்

(எப்.முபாரக்)

கொவிட் 19 நோய்த் தொற்றின் மூலம் மரணிக்கும் ஜனாஸாக்களை கிண்ணியா பிரதேசசபைக்குட்பட்ட மகமாறு மையவாடியில் நல்லடக்கம் செய்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதையிட்டு அடக்கம் செய்வதில் எவ்வித குறைபாடும் ஏற்படாமல் நல்லடக்கம் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளர் கே.எம். நிஹார் அவர்களின் தலைமையின் கீழ் சபையின் உறுப்பினர்கள் ஊழியர்கள் சேர்ந்து பல வேலைத்திட்டங்களை செய்து வருகின்றனர்.மையவாடியினை நேற்று சுப்பரவு செய்து நல்லடக்கத்திற்கான ஏற்பாடு கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளர் மேற்கொண்டு வருகின்றார்.

மன்னாரில் வறுமைக்கோட்டுக்குள் வாழ்வோருக்கு உதவிகள் செய்வோர் மாவட்ட செயலகத்தினூடாக செயல்படுத்தவும்

அரச அதிபர் கோரிக்கை

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வோருக்கு உதவிகள் செய்வோர் அவர்களுக்கு நேரடியாக வழங்குவதை தவிர்த்து மாவட்ட செயலகத்தினூடாக வழங்கும்போது யாவருக்கும் சென்றடையக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நாளாந்த கூலித்தொழிலை நம்பி வாழ்வோர் அதிகமாக காணப்படுவதால் வறுமை கோட்டுக்குள் வாழ்வோர் அதிகமானோர் பயணக்கட்டுப்பாட்டின் நிமித்தம் தொழிலிழந்து இருப்போர் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே இவர்களுக்கான உதவிகள் யாவருக்கும் சென்றடையக்கூடியதாக ஒழுங்குகள்செய்யப்படவேண்டியநிலை

காணப்படுகின்றது.

இவற்றை கவனத்துக்கு எடுத்துள்ள ஒரு சில அரசு சார்பற்ற நிறுவனங்களும் மற்றும் தனிப்பட்டவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை செய்து வருவதையும் காணக்கூடியதாக இருகின்றது.

இவ்வாறான உதவிகள் வழங்குவோர் சில சமயங்கள் ஒரே கிராமங்களுக்கு ஒரே மக்களுக்கு வழங்கி வருவதால் பல கிராமங்களுக்கு இவைகள் சென்றடைவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே மன்னார் மாவட்டத்தில் வறுமைகோட்டுக்குள் உதவிகள் செய்வோர் தாங்களே நேரடியாகச் சென்று வழங்காது அவைகளை மன்னார் மாவட்ட செயலகத்தினூடாக வழங்கப்பட வேண்டும்என தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள் அவர்களின் பகுதிகளிலுள்ள கிராமங்களில் மிகவும் வறுமைக்கோட்டுக்குள் வாழும் குடும்பங்களை இனம் கண்டு வைத்திருப்பதுடன் இவ்வாறான உதவிகள் கிடைக்கும் போது ஒழுங்கின்படி அவர்களின் வீடுகளுக்கே கொண்டுச் சென்று நேரடியாக வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதன்மூலம் யார் யாருக்கு உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளது யாருக்கு உதவிகள் கிடைக்கப் பெறவில்லை என்பதை கண்டு கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பீ.சி.ஆர் இயந்திர உபகரணங்கள் கையளிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு பீ.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளும் இயந்திரம் உள்ளிட்ட உபகரண தொகுதியொன்றினை கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு ஹரீத்தாஸ் எகட் நிறுவனத்தின் உதவியுடன், மலேசியாவில் இயங்கிவரும் சமூகநல அமைப்பான அலாகா தொண்டு நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் 11 மில்லியன் பெறுமதியான பீ.சி.ஆர் இயந்திரத்துடன் உப இயந்திரசாதன தொகுதியொன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கொரோனாதடுப்பு செயலணிக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள இராணுவத் தரப்பு பிரதானி 23 வது படைப்பிரிவின் கொமாண்டர் மேஜ ஜெனறல் நலின் கொஸ்வத்த ஆகியோர் முன்னிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி.க.கலாரஞ்சினி, நுண்ணுயிரியல் வைத்திய நிபுணர் பி.தேவகாந்தன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லக்சிறி விஜயசேன, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன், மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே.சிவபாலன் குருக்கள், மட்டக்களப்பு ஹரீத்தாஸ் எகட் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி ஜேசுதாசன், மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை ராஜன் ரொகான் அடிகளார், மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் பொருளாளர் மொகமட் இக்பால், தட்சன் அம்பலவாணர், மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் இணைப்பாளர் கிறிட்டி, மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர்கள்உள்ளிடதுறைசார் நிபுணர்கள் உள்ளிட்டோர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

35 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியின் ஆசிரியர் திருமதி. வேணுகுமாரி இரட்ணராஜா தனது 35 வருடகால சேவையில் இருந்து வெள்ளிக்கிழமையுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

மூதூர் சேனையூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் பூர்வீக தமிழ் கிராமமான மூதூர், கட்டைபறிச்சானை தனது பிறப்பிடமாகக் கொண்டவர்.

இந்நிலையில் தனது 35 வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறும் நிலையில் திருமதி. வேணுகுமாரி இரட்ணராஜா அவர்களை விபுலானந்தா கல்லூரி சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

கல்லூரி யின் உயர்கல்வி மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய மாணவர்கள், சகஆசிரிய சமூகமும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

பயனாளிகளின் நலன்கருதி வீடுகளுக்குச் சென்று உதவித் தொகையை வழங்கி வைத்த உப தபாலதிபர்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

தபாலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வரும் ஓய்வூதிய கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு மற்றும் பொதுமக்கள் நிவாரண கொடுப்பனவுகளை மக்கள் நலன் கருதி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை உப தபாலக உப தபாலதிபர் எம்.எஸ்.எஸ். அஸ்ரப் பயணாளிகளின் வீடுகளுக்குச் சென்று உதவித் தொகையை வழங்கி வைத்தார்.

குறித்த கொடுப்பனவுகளை இன்றும், நாளையும் தபாலகங்களில் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் இவ் கொடுப்பனவுகளை முதியோரின் நலன்கருதி உப தபாலதிபர்நேற்று வீடுகளுக்குச் சென்று வழங்கி வைத்தார்.

பயணத் தடை காரணமாக வயோதிபர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாமல் அவர்களது இல்லங்களுக்குச் சென்று இக் கொடுப்பணவுகளை வழங்கியுள்ளதாக தபாலதிபர் எம்.எஸ்.எஸ். அஸ்ரப் தெரிவித்தார்.

கதிர்காமக்கந்தனின் ஆடிவேல் விழா ஜூலை 10ஆம் திகதி ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 24ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

கொடியேற்றத்திற்கு 45தினங்களுக்கு முன் நடைபெறும் மரபுரீதியான பாரம்பரிய கன்னிக்கால் அல்லது கொடிக்கால் அல்லது முகூர்த்தக்கால் நடும் சடங்கு நேற்று முன்தினம் அதிகாலை 4.30மணியளவில் கதிர்காமத்தில் சுகாதாரமுறைப்படி நடைபெற்றது.

கொரோனாச்சூழல் நிலவுகின்ற காரணத்தினால் சுகாதாரத் துறையின் உத்தரவுகளைத் தொடர்ந்தே 2021 ஆண்டு எசலா விழா ஜூலை 10 ஆம் தேதி தொடங்கி, பிரமாண்ட ஊர்வலத்துடன் ஜூலை 24அன்று நிறைவடைவது பற்றி முடிவெடுக்கப்படும் என ஆலய நிருவாகம் அறிவித்துள்ளது.

இதேவேளை பாரம்பரிய கதிர்காம பாதயாத்திரை கடந்த வருடத்தை போல் இம்முறையும் கொரோனா ரத்துச்செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறையில் 54 கிராமமட்ட கொரோனா தடுப்பு குழுக்கள் அமைப்பு!

24மணி நேரமும் அவசர நிலையம் என்கிறார் பிரதேசசெயலாளர் ஹனிபா!

[வி.ரி.சகாதேவராஜா]

அம்பாறை மாவட்டத்தில் அதிகூடிய சனத்தொகை மற்றும் பரப்பைக்கொண்டுள்ள சம்மாந்துறைப்பிரதேசத்தில் கொரோனா அடுத்தகட்டத்தில் வேகமாகப்பரவலாம் என்று கூறப்பட்டதையடுத்து அங்கு பல முன்னோடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறைப்பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். எம்.ஹனிபா மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக அங்குள்ள 51கிராமசேவையாளர் பிரிவுகளிலும் கிராமமட்ட கொரோனா விழிப்புணர்வுக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வளத்தாப்பிட்டி கிராமசேவையாளர் பிரிவு பெரிதாகையால் அங்கு 3கிராமமட்டக்குழுக்கள் அமைக்கப்பட்டதாக பிரதேச செயலாளர் ஹனிபா தெரிவித்தார்.

கல்முனைப்பிராந்தியத்தில் கோரொனாத் தொற்று தீவிரமாகப்பரவலாம் என எதிர்பார்க்கப்பட்ட சம்மாந்துறைப்பிரதேசத்தில் 24மணி நேரமும் இயங்கும் கொரோனா அவசர நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில் இயங்கும் இப்பிரிவுக்கு நிருவாக உத்தியோகத்தர் பாறூக் பொறுப்பாகவிருக்கிறார். இதற்கான ஆலோசனையை ஒய்வுநிலை வைத்திய அதிகாரி மர்சூக் தன்னார்வமாக வழங்கிவருகிறார்.

கிராமிய மட்டக்குழுக்கள்

நேரடியாக வொய்ஸ் மெசேஸ் மூலம் இவ் அவசர நிலையத்திற்கு தகவல் வழங்லாம். மேலும் பொதுமக்களும் கொரோனா தொடர்புடைய தகவல்கள் தேவைகள் பிரச்சினைகளை 24மணிநேரமும் அங்கு சமர்ப்பிக்கலாம் என பிரதேச செயலாளர் ஹனிபா கூறுகிறார்.

சம்மாந்துறைப் பிரதேசத்தைப்பொறுத்தவரையில் இதுவரைகாலமும் 97 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் அவர்களில் 78பேர் குணமாகி வீடு திரும்பிவிட்டனர். தற்போது ஆக 19பேர் ஆஸ்பத்திரிகளில் சிகச்சைபெற்றுவருகின்றமையும் 37பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பாரிய சம்மாந்துறைபிரதேசத்தின் நிலைமை பற்றி பிரதேச செயலாளர் எஸ்எல்எம்.ஹனிபா கூறுகையில்:

கரையோரப் பிரதேசத்தில் சம்மாந்துறையில்தான் அடுத்த தீவிரமான நோய் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அம்பாரையில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

எனவே இது மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டிய காலகட்டமாகும். தயவு செய்து சகலரும் கடந்தகால செயற்பாடுகளுக்கு மேலதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றுமாறு அன்பாக கேட்டுக்கொள்கிறேன் .

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களை மிகுந்த அவதானத்துடன் கண்காணிப்பது. கிராம மட்ட குழுக்களை வலுப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த அதிகமாக கவனம் எடுப்பது. பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலகட்டத்தில் பிரதான வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தாலும் உள் வீதிகளில் மக்கள் அதிக நடமாட்டம் காணப்படுவதாக கூறப்படுகிறது இதனைக் கட்டுப்படுத்துவது.

தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட உடன் முதல்நிலை தொடர்பாளர்களை விரைவாக அறிக்கையிடுதலும் தனிமைப்படுத்தலும். யாராவது கிராம மட்ட உத்தியோகத்தர்கள் அசிரத்தை உடன் செயல்படுவது சம்பந்தமாக அறிக்கை கிடைக்கப்பெறும் பட்சத்தில் அது தொடர்பாக அதிகபட்ச கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

பயணக்கட்டுப்பாட்டை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

நூருல் ஹுதா உமர்]

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் அவர்களின் தலைமையில் பயணக்கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டவர்களுக்கு எதிராக கல்முனை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொவிட்-19 கொரோணா தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது இதனை மீறி செயற்பட்டவர்களுக்கு எதிராக கல்முனை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது மற்றும் முகக் கவசம் அணியாமல் தனது வீட்டிற்கு முன் உரையாடி நின்றவரின் வீடும் தனிமைப்படுத்தப் பட்டது. இறுக்கமான செயற்பாடுகள் மக்களின் நலன் கருதியே மக்களது ஒத்துழைப்பின்றி இந்த கொவிட்-19 கொரோணா வைரசினை கட்டுப்படுத்த முடியாது. 3 வது அலையில் சாய்ந்தமருதில் 3 தொற்றாளர்கள் அடையாம் காணப்பட்டனர். தற்பொழுது 2 பேர் சிகிச்சையினை பூரணமான முறையில் பெற்று வீடு திரும்பியுள்ளனர் ஒருவர் மாத்திரமே சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்.”வரும் முன் காப்போம்மக்கள் சுகாதாரத் துறையினருக்கும் பாதுகாப்பு துறையினருக்கும் ஒத்துழைப்பு வழங்கி இந்த கொரோணா தொற்றை எமது பிரதேசத்தில் பூச்சிய நிலைமைக்கு கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குங்கள்” என சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் மக்களை கேட்டுக்கொண்டார்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன்
அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

கல்முனை மாநகரசபை மீது முன்வைக்கப்பட்ட குற்றசாட்டு, அரசியலுக்காக செய்யப்பட்ட ஒன்றே!

– மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி !

கொரோணா காலத்தில், உயிர்களையும் துச்சமாக மதித்து கடுமையான தியாக சிந்தனையுடன் கூடிய சேவையை வழங்கிவரும் சுகாதாரப்பிரிவு ஊழியர்களின் மனதை நோகடித்து, அவர்களின் சேவை வழங்கும் நிலையில் தடுமாற்றத்தை உண்டாக்கும் அரசியல் ஆதாய ஏற்படுகள் தான் மாநகர சபைக்கு எதிராக அண்மையில் மாநகர சபை உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களாகும் என கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. கே. எம். அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையினால் முறையாக மனித கழிவுகள் அகற்றப்படுவதில்லை என குற்றம் சாட்டி கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகரன் ராஜன், க.சிவலிங்கம் ஆகியோர் அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சவளக்கடை பொலிஸ் பிரிவில் விசேட சோதனை சாவடி கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்!

[ஏ.எல்.எம்.ஷினாஸ்]

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பயணத்தடை அமுல்படுத்தப்பட்டிருக்கும் காலப்பகுதியில் கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர் தலைமையில் நேற்று சவளக்கடை கிட்டங்கி பிரதான சந்தியில் விசேட பொலிஸ் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டு குறித்த வீதி ஊடாக பயணம் செய்த வாகனங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றாது பயணம் செய்தவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டதுடன் சிலர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

எனினும் அத்தியவசிய தேவைகளுக்காக பயணம் செய்வோர் மாத்திரம் அனுமதிக்கப்பட்டனர்.

சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எம். அஸ்ரப் மற்றும் பொலிஸ் சாஜன் எஸ்.எம்.றாபி மொளலானா உள்ளிட்ட குழுவினர் இந்த விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை மாவட்டத்தின் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு பெரியநீலாவணை போன்ற பிரதேசங்கள் பயணத்தடை காரணமாக வெறிச்சோடிப்போய் கிடந்ததையும் காணக்கூயெதாக இருந்தது.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

முக்கிய அறிவித்தல்

சுபீட்சம் புதிய பாதையில்...

சுபீட்சம்
மின்னிதழ் நாளேடு
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
வெளிவராது.

அதற்கு பதிலாக
சனிக்கிழமைகளில்
உங்கள் சுபீட்சம் புதுப்பொலிவுடன்
வெளிவரவிருக்கிறது என்பதை
அறியத்தருகின்றோம்.

சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை: அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

உடனடிச் செய்திகளுக்கு **www.supeedsam.com** தளத்திற்கு பிரவேசியுங்கள்